**திரைப்பட கலைஞர்களுக்கும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு - 2021**

-----------------------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திரைப்பட கலைஞர்களுக்கும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காட்டப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தை தவிர, நம்பிக்கைப் பொறுப்பின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயாமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நம்பிக்கைப்பொறுப்பைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நம்பிக்கைப் பொறுப்பின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல், அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கத்தை செலுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில்

அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின் வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்களை முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள, புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கப்பூர்வமாக செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நம்பிக்கைப் பொறுப்பின ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய போதுமான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தவா என்பதும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நம்பிக்கை பொறுப்பினால் கூட்டுத் தொகை ரூபா 10,179,613 கிரயத்திற்கு கொள்வனவு செய்த முகப் பெறுமதி ரூபா 9,083,524 கொண்ட 02 திறைசேரி பிணைமுறிகள் தொடர்பாக ரூபா 1,096,089 ஆன மொத்த திறைசேரி பிணைமுறி நட்டத்தில் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 239,801 ஆன பிணைமுறி நட்டத்தை ஆண்டின் இலாபத்திற்கு பதிவழிக்க நடவடிக்கை எடுக்காத காரணத்தால் ஆண்டுக்கான செலவு அப் பெறுமானத்தால் குறைவாக மற்றும் முதலீட்டு பெறுமதி அப் பெறுமானத்தால் மிகைப்படுத்தி காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்ய நமவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய பிணைமுறி நட்டத்தை இலாபத்திற்கு பதிவழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திறைசேரி உண்டியல்கள் கால முதிர்வின் போது கிடைத்திருந்த முன்னைய காலப்பகுதிக்கான ரூபா 30,055 வட்டித் தொகை தவறாக எதிர்காலத்திற்கு கிடைத்த திறைசேரி உண்டியல் வட்டி வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 68,296 ஆன கிடைக்க வேண்டிய திறைசேரி உண்டியல் வட்டி கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி முன்கூட்டி கிடைத்தாதக் கருதி கணக்கு வைத்ததில் இவ்வாறு காட்டப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நீங்கள் சுட்டிக்காட்டியுள்ள பிரகாரம் குறிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்கான திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டியை சரியாகக் கணக்கிட்டு கணக்குகளில் செம்பையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்கு உரியதாக முன்னர் கிடைத்த திறைசேரி பிணைமுறி வட்டி ரூபா 12,633 ஆன போதும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 57,128 ஆகக் குறிப்பிடப்பட்டுள்ளதால் முன்னர் கிடைத்த திறைசேரி பிணைமுறி வட்டி ரூபா 44,494 அதிகமாக மற்றும் முதலீட்டு வட்டி வருமானம் அப்பெறுமானத்தால் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்கான திறைசேரி பிணைமுறிகள் மீதான வட்டியை சரியாகக் கணக்கிட்டு கணக்குகளில் செம்பையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரிய திறைசேரி உண்டியல் வட்டி ரூபா 193,567 ஆன போதும் அது ரூபா 144,141 ஆக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதால் ஆண்டின் வருமானம் ரூபா 49,426 தொகை குறைவாகக் காண்பிக்கப்பட்டது. | கணக்கீட்டு முறையின் மாற்றம் மற்றும் இறுதிக் காலப் பகுதியில் வட்டி விகிதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் மீது இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும் எதிர்காலத்தில் நீங்கள் சுட்டிக்காட்டியுள்ள பிரகாரம் குறிப்பிட நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்கான உண்டியல்கள் மீதான வட்டியை சரியாகக் கணக்கிட்டு கணக்குகளில் செம்பையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1986 இன் 3 ஆம் இலக்க திரைப்பட கலைஞர்களுக்கும் மற்றும் திரைப்பட தொழில்நுட்ப வியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்புச் சட்டத்தின் 6(2)(உ) பிரிவின் பிரகாரம் நிதி முதலீடு செய்யப்படும் போது சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும், 2021 சனவரி 22 திகதி திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 500,000 தொகைக்கு சபையின் அங்கீகாரம் பெறப்படவில்லை. | நம்பிக்கை பொறுப்பு சபையின் தழுவுதல் அங்கீகாரத்திற்கு உட்பட்டு தலைவரின் அங்கீகாரத்துடன் இந்த முதலீடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் அனைத்து முதலீடுகளுக்கும் நம்பிக்கை பொறுப்பு சபையின் அங்கீகாரத்தை பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நிதி முதலீடு செய்யப்படும் போது நம்பிக்கை பொறுப்பு சபையனி அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுக்ள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| ருக்மனி தேவி நிதியம் | 462,778 | மேற்கொள்ள வேண்டிய நோக்கங்கள் மற்றும் பணிகள் தொடர்பாக எழுத்துமூல தகவல் மற்றும் சான்றுகள் | இந்த விடயம் தொடர்பாக தெளிவுபடுத்துவதற்கு முன்வைக்க போதுமான ஆவண ஆதாரங்களை கண்டறித்து கொள்ள இயலாதுள்ளது. | இந்த நிதியத்தை ஸ்தாபிப்பது தொடர்பான நோக்கங்கள் தொடர்பாக கண்டறிந்து அதற்கேற்ப செயல்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1986 இன் 3 ஆம் இலக்க திரைப்பட கலைஞர்களுக்கும் மற்றும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர் களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்புச் சட்டம். | | | |
| (i) | 02 ஆம் பந்தி | திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கை பொறுப்பின் பெயரில் ஒரு கூட்டுத்தாபனமாக இருக்க வேண்டியதுடன் அதற்கு இடையறாத நிலைத்திருத்தல் மற்றும் பொது சின்னமொன்று இருக்க வேண்டிய போதும் நம்பிக்கை பொறுப்பு நிறுவப்பட்டு 37 ஆண்டுகள் கடந்தும் அத்தகைய சின்னமொன்று காணப்படுவதாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. . | தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கை பொறுப்பிற்கு பொது சின்னமொன்று ஆரம்ப காலத்தில் இருந்த போதும் ஆளணியினர்கள் மாறியதன் காரணமாக தற்போது அவ்வாறான சின்னமொன்று இல்லாதமை குறித்து கவனம் செலுத்தி பொது சின்னம் ஒன்றை தயாரதித்துக் கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) 3(1) ஆம் பிரிவு | நம்பிக்கைப் பொறுப்பின் நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடுகளுக்காக நம்பிக்கைப் பொறுப்புச்சபை ஒன்று நியமிக்கப்பட வேண்டிய போதும் 2012 நவம்பர் 30 திகதி முதல் 2021 ஜுலை 06 திகதி வரை 08 ஆண்டுகளும் 07 மாதங்களிற்கு கிட்டிய காலத்திற்காக நம்பிக்கைப் பொறுப்புச் சபையொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானதாகும். | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) 06 (2) (ஈ) பந்தி | நம்பிக்கை பொறுப்பின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் நியமனம் மற்றும் சேவையில் ஈடுபடுத்துதல் தொழிலாளர் ஊதியம் போன்ற விடயங்களில் விதிகள் வகுக்கப்பட வேண்டிய போதும் நம்பிக்கை பொறுப்பு செயற்பாட்டிற்கு வந்த நாளிலிருந்து இது வரை அத்தகைய விதிகள் உருவாக்கம் அல்லது நம்பிக்கை பொறுப்பின் பணிகளை மேற்கொள்ள அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு இருக்காததுடன் திரைப்பட கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நம்பிக்கை பொறுப்பின் நடவடிக்கைகளுக்காக இணைக்கப்பட்டிருந்தனர். | அவதானிப்பு சரியானதாகும், கூட்டுத்தாபன நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நிதி நிலைமை நம்பிக்கை பொறுப்பின் பிரதான நோக்கங்களை ஏனும் நிறைவேற்ற ஆரம்பம் முதல் போதுமானதாக இல்லாததால் இங்கு கடமைப் பணிகள் சேவைத் தேவைப்பாட்டின் மீதி தேசிய திரைப்படக் கூட்டத்தாபன ஆளணி அலுவலர்கள் ஊடாக மேற்கொள்ள கட்டுப்பாட்டு அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் இந்த நோக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 113,069 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் மிகை ரூபா 10,884 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 102,185 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு ஓய்வூதிய கொடுப்பனவுகள் ரூபா 695,000 இனால் மற்றும் வருமானம் ரூபா 580,312 இனால் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு நிறுவப்பட்டு கணக்காய்வு திகதிக்கு ஏறக்குறைய 37 ஆண்டுகள் கடந்துள்ளதுடன் நம்பிக்கை பொறுப்பு அதே ஆரம்ப நிலையில் அல்லது குறைந்த செயற்பாட்டு மட்டத்தில் நம்பிக்கை பொறுப்பின் செயற்படுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கிடையில் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியம் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன் தற்போதுள்ள பொருளாதார நிலைமைக்கு ஏற்ப ஓய்வூதியத்தை நாளாதுவரையாக்கல், பொறுத்திருப்பு பட்டியலிலுள்ள ஓய்வூதியதாரர்களுக்கு விரைவில் ஓய்வூதியம் வழங்க மற்றும் நலன்புரி மருத்துவ வசதிகள் வழங்குதல் போன்ற எந்தப் பணிகளையும் நம்பிக்கை பொறுப்பினால் செயயப்படாதமை அவதானிக்கப்பட்டது. | கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு நிறுவப்பட்ட பின்னர் ஆரம்ப சந்தர்ப்பத்தில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செய்யப்பட்ட நிதிசார் நிலையான அன்பளிப்பு, திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணைமுறி பத்திர வைப்புக்கள் போன்றவற்றை பேணிச் செல்வதால் கிடைத்த வட்டித் தொகை மற்றும் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் ஆண்டுதோறும் வழங்கப்படும் நிதி பங்களிப்பு ஆகியவை மாத்திரம் கூட்டுத்தாபன நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் வருமான நிலைமையாகக் காணப்பட்டமையும், இங்கு நிதி நிலைமையை முன்னேற்றுவதற்காக பல சந்தர்ப்பங்களில் பல்வேறு முன்மொழிவுகளை செயற்படுத்த ஆரம்பிக்கும் போது நடைமுறை சிககல்களிற்கு முகம் கொடுக்க நேரிட்டதால் எதிர்பார்த்த நோக்கம் அடையப் பெறாததால் அந்த முன்மொழிவுகள் தோல்வியடைந்தமைதால் கூட்டுத்தாபன நம்பிக்கை பொறுப்பின் பிரதான நோக்கங்களிற்கிடையே தகுதியான திரைப்பட கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்களுக்கு மாதாந்த ஓய்வூதியத் தொகையை வழங்குவது மாத்திரம் இடம் பெற்றுள்ளது. | நிதியத்தின் நிதி நிலைமையை முன்னேற்றிக் கொள்ளவும் நம்பிக்கை பொறுப்பின் நோக்கங்களை நிறைவேற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 பிரிவினால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) இன் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 02 மாதங்களினுள் அந்த அந்த நிதியம் தொடர்பாக உறுதிசெய்யப்பட்ட | மீளாய்வாண்டினுள் உலகம் பூராவும் பரவிய கோவிட் தொற்று நிலைமை காரணமாக 2021 ஆண்டில் நடாத்தப்பட்ட புதிய நம்பிக்கை பொறுப்பு சபையும் செயற்படல் இடம் பெற்றது தாமதத்துடன் மற்றும் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிப்பதில் தாமதித்தலும் செயலாற்றுகை | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை உரிய திகதியில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையொன்று அரச நிதித் திணைக்களத்திற்கு பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அத்பதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 2021 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2023 ஏப்ரல் 25 திகதி சமர்ப்பித்திருந்ததுடன் அதனோடு செயலாற்றல் அறிக்கையொன்றை சமர்ப்பித்திருக்கவில்லை. | அறிக்கையை சமர்ப்பிக்காமைக்கும் காரணமானது. |

### 4.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்கம் கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(ஊ) பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உள்ளக கணக்காய்வு கடமைகள் உரியவாறு செயற்படுவதற்கு ஆக்கபூர்வ செயல்முறையொன்று உள்ளதாக உறுதிப்படுத்த வேண்டிய போதும் நம்பிக்கை பொறுப்பிற்காக உள்ளக கணக்காய்வை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்பு சரியானதாகும். | சட்டத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.3 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41(1) பிரிவின் பிரகாரம் குறித்த பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அல்லது குறித்த கட்டுப்பாட்டு சபையினால் தமது உதவிக்காக நியமிக்கப்படும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று இருக்க வேண்டிய போதும் அவ்வாறான குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்காததுடன் 2021 ஆண்டில் நம்பிக்கை பொறுப்பினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்தவ குழுக் கூட்டம் நடாத்தவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்பு சரியானதாகும். | சட்ட பிரகாரம் செயல்பட வேண்டும். |

**4.4 பாதீட்டு கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 பிரிவினால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 877(1)(இ) இன் பிரகாரம் 2021 ஆண்டிற்கான பாதீடொன்று தயாரித்து அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2013 ஆம் ஆண்டு முதல் 2021.05.21 திகதி வரையும் நம்பிக்கை பொறுப்பு சபையொன்று நியமிக்கப்படாததால், திரைப்பட கூட்டுப்தாபன நம்பிக்கை பொறுப்பின் பிரதானமான நோக்கங்களுக்கு இணங்க 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்து உரிய அங்கீகாரத்துடன் 2020 ஆம் ஆண்டினுள் சமர்ப்பிக்க முடியவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்தம் பாதீடொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |